# கடன் ஒப்பந்தம் - வாகனக் / உபகரணக் கடன்

இந்த ஒப்பந்தம் உடன்படிக்கையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திலும், தேதியிலும் செய்யப்பட்டது.

முதல் பகுதியில் கடன் வாங்குபவர், கூட்டு கடனாளர் குறிப்பாக விவரிக்கப்பட்டு, இந்த அட்டவணையின்படி (இதன் பின்னர் "கடன் பெறுபவர்" என குறிப்பிடப்படுபவர்), மற்றும் உத்தரவாதமளிப்போர் / கள், குறிப்பாக விவரிக்கப்பட்டு, இதன்படி அட்டவணையில் (இதன் பின்னர் "உத்தரவாதமளிப்போர்" என குறிப்பிடப்படுபவர்) இந்தச் சொல்லில், அதிலுள்ள பொருள் அல்லது அர்த்தத்திற்கு எதிர்ப்பானதாக இருந்தால் ஒழிய, அதன் தொடர்பான வெளிப்பாடுகள், இதன்பின் அர்த்தம் என்று கருதப்படுவது, அவர் / அவள் / அதன் / அவர்களின் அந்தந்த வாரிசுகள், செயல்படுத்துபவர்கள், நிர்வாகிகள், நியமிக்கப்பட்டவர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட பிரதிநிதிகள் (அதாவது கடன் வாங்கியவர் ஒரு தனிநபர் / தனி உரிமையாளர்) பின்னுரிமையாளர்-அவ்வாறு பொருந்துமானால் (இதில் கடன் வாங்குபவர் 2013, நிறுவனச்சட்டத்தின் பொருள் பொருந்தும் ஒரு நிறுவனம், அல்லது வேறு மற்ற பெருநிறுவன அமைப்பு), அந்தந்த காலத்தில் உள்ள நிறுவனத்தின் பங்குதாரர்(கள்), அவர்களில் பிழைத்திருப்பவர்(கள்) மற்றும் வாரிசுகள், செயல்படுத்துபவர்கள், நிர்வாகிகள், சட்ட பிரதிநிதிகள், நியமிக்கப்பட்டவர்கள் மற்றும் பங்குதாரர்களின் வாரிசுகள் (அதாவது கடன் வாங்கியவர் அல்லது உத்திரவாதமளிப்போர் ஒரு கூட்டு நிறுவனமாக இருப்பவர்) அடங்கும்

**மற்றும்**

மற்ற பகுதியில் சோழமண்டலம் முதலீட்டு மற்றும் நிதி நிறுவனம் லிமிடெட், நிறுவனச் சட்டம், 1956 இன் கீழ் பதிவு செய்யப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனம் மேலும் சோலா கிரெஸ்ட்', சி 54-&55, & சூப்பர் பி4, திரு வி கா இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை - 600 032 என்ற முகவரியில் உள்ள அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், (இதன் பின்னர் "நிறுவனம்" என குறிப்பிடப்படுகிறது) இந்தச் சொல்லில், அதிலுள்ள பொருள் அல்லது அர்த்தத்திற்கு எதிர்ப்பானதாக இருந்தால் ஒழிய, அதன் தொடர்பான வெளிப்பாடுகள், இதன்பின் அர்த்தம் என்று கருதப்படுவது அதன் வாரிசுதாரர்கள் மற்றும் இதற்கு நிர்ணயிக்கப்பட்டவர்கள்

**அதேசமயம்**

A) இதனூடே இந்நிறுவனம் மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் பிற சொத்துக்களை வாங்குதல் / மறுநிதியளித்தல் போன்றவற்றிற்கு கடன் உதவியை விரிவாக்கும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது;

B) கடன் பெறுபவர் வாகனங்கள், இயந்திரங்கள்/உபகரணங்கள் மற்றும் சொத்துக்களை வாங்குதல் / மறுநிதியளித்தல் போன்றவற்றிற்கு ஒப்பந்த அட்டவனையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வாகனங்கள் இயந்திரங்கள் / உபகரணங்கள் அல்லது சொத்தை பிணையமாக அதன் மேல் கடன் உதவி அளிக்குமாறு இந்நிறுவனத்திடம் கடன் பெறுபவர் கோரியுள்ளார்;

C) கடன் பெறுபவர் கடன் வசதியைப் பெறுவதில் கருத்தில் கொள்வதன் மூலம் நிறுவனம் விதித்த நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளின்படி கடைப்பிடிக்க ஒப்புக் கொண்டார், மேலும் முழுமையாக இதன்பின் நிறுவனத்தால் எழுத்தில் அங்கீகரிக்கப்பட்டால் அன்றி அதைதவிர மற்றும் குறிப்பாக, இந்த ஒப்பந்தத்தின் கீழ் முழு அளவிலான தொகையை நிறுவனத்திற்கு செலுத்தும்முன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள / துணைச் சொத்தை, விற்பனை, அந்நியப்படுதல், அடமானம் அல்லது வேறு எந்த விதத்திலும் ஈடுபடுத்த முடியாது;

D) உத்தரவாததாரர், அந்த குறிப்பிட்ட நிதி வசதிகளை கடனாளரிடம் விரிவுபடுத்துமாறு நிறுவனத்திடம் கேட்டுக் கொண்டார் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட கருத்தின்படி, இதன் கீழ் உள்ள ஒப்பந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் பெறுபவர் தன் முறையான செயல்திறனை அளிப்பார் மற்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி பொறுப்புகளை நிறைவேற்றுவார் என்று உத்திரவாதமளிப்பவர் நிறுவனத்திற்கு உத்திரவாதம் அளிக்கின்றார்;

E) நிறுவனம், கடன் பெறுபவரால் வழங்கப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட பிரதிநிதித்துவங்களை நம்பும்வகையில், நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளின்படி இதன்பின், கடன் பெறுபவர் முயற்சித்த கடன் தொகையை வழங்க ஒப்புக்கொண்டது;

**இப்போது இந்த உடன்படிக்கைபின் வருமாறு சாட்சியமைக்கப்படுகிறது:**

**வரையறைகள் மற்றும் விளக்கங்கள்:**

இந்த ஒப்பந்தத்தில், இந்தச் சொல்லில், இதிலுள்ள பொருள் அல்லது அர்த்தத்திற்கு எதிர்ப்பானதாக இருந்தால் ஒழிய, கீழே பட்டியலிடப்பட்டுள்ள வெளிப்பாடுகள் பின்வரும் அர்த்தங்களைக் கொண்டிருக்க வேண்டும். இங்கே வரையறுக்கப்படாத விதிமுறைகள் மற்றும் வெளிப்பாடுகள் 1897, பொது உட்கூறுகள் சட்டத்தின் அடிப்படையில், விளக்கம் மற்றும் அர்த்தம் அவைகளுக்கு நியமனப்படுத்தப்பட்டுள்ளது, அந்த விளக்கத்தையும் அர்த்தத்தையும் கொண்டிருக்கும்.

a) "ஒப்பந்தம்" என்ற சொல்லின் அர்த்தம் மற்றும் உள்ளடங்கியதாவது, இந்த கடன் உடன்படிக்கை, அட்டவணை / கள், ஏதேனும் சேர்க்கப்பட்டது, வரவேற்ப்பு கடிதம்,துணை ஒப்பந்தங்கள் அல்லது இணைப்புகள் ஆகியவை இந்த உடன்படிக்கைக்கு அல்லது அதனுடன் இணைந்தவை.

b) மோட்டார் வாகனம்/ங்கள் அல்லது மற்ற பிற இயந்திரங்கள் அல்லது உபகரணம்/ங்கள் அல்லது மற்ற பிற சொத்து/க்கள், புதியதோ அல்லது உபயோகப்படுத்தியதோ, இந்த ஒப்பந்தத்தின் அட்டவணையில் விளக்கியுள்ளபடி, வாங்குவதற்கு / மறுநிதியளித்தலுக்கு இதன் கீழ் கடன் வழங்கப்பட்டு வருகிறது மற்றும் இது நிறுவனத்திற்கு ஆதரவாக கடன் பெறுபவரால் அடகு வைக்கப்பட்ட அல்லது வழங்கப்படுகிற அல்லது பிணையமாக வழங்க காரணமாக அமைந்தது என்பது "சொத்து" என்ற வார்த்தையில் அடங்கிய பொருளாகும். வாகன உடற் கட்டமைப்பு, இயந்திர மேம்பாடு போன்றவை கடன் பெறுபவரால் எப்போதும் மேற்கொள்ளப்படும் அதன் வளர்ச்சிப்பெறுக்கு மற்றும் சேர்க்கைகள் போன்ற அனைத்தும் "சொத்து/களில்" உள்ளடங்கும்.

c) "செலுத்தவேண்டிய தேதி" என்ற வெளிப்பாட்டிற்கு, கடனின் பிரதான தொகையின் தவணையை மற்றும் / அல்லது வட்டி மற்றும் / அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தும் வேறு எந்த தொகையும் மற்றும் /

அல்லது கடன் தொகையின் பாக்கி இருந்தால் கட்ட வேண்டிய தேதி, இந்த ஒப்பந்தத்தின் எந்தவொரு உட்பிரிவின் கீழ் பணம் செலுத்துவதன் காரணமாக இது இருக்கலாம் என்பது பொருள்.

d) “எலக்ட்ரானிக் கிளியரிங் சர்வீசஸ்" அல்லது இ சி எஸ் என்பது இந்திய ரிசர்வ் வங்கியால் அறிவிக்கப்பட்ட ஒரு பற்றுச்சீட்டு தீர்வு சேவை, இந்த கடன் ஒப்பந்தத்தின் கீழ் இஎம்ஐ கள் செலுத்தும் வசதிக்காக கடன் வாங்கியவரிடம் எழுத்துப்பூர்வமாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பது இந்த வெளிப்பாட்டின் பொருளாகும்.

e) "தவணை" என்ற சொல், வரவேற்பு கடிதம்/கால அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாதாந்திர கட்டண தொகையை குறிக்கும், கடன் காலத்தின் போது வட்டியுடன் கடன் வாங்குவதற்கு தேவையானது என்று பொருள்படும்.

f) "கடன்" என்ற சொல், இந்த உடன்படிக்கை மற்றும் அட்டவணைக்கு வழங்கப்பட்ட கடன் தொகை என்று பொருள்படும்.

g) "அபராதக் கட்டணங்கள்" என்ற சொற்றொடரின் பொருள், தவணைகளைச் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டால் கடன் வாங்கியவர் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய மற்ற தொகைகளுக்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் நிறுவனம் நிலுவைத் தேதியிலிருந்து பணம் செலுத்தும் தேதி வரை விதிக்கும் கட்டணங்கள்.

h) "முன்கூட்டியே முடித்தல் (ப்ரீக்லோஷர்)" என்ற சொல், நடைமுறையில் கடனைத் திரும்பச் செலுத்தும் நேரத்தில் நிறுவனத்தால் வழங்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி அதன் சார்பில் முன்கூட்டியே திருப்பிச் செலுத்துதல் என்று பொருள்படும்.

i) "பின் தேதியிடப்பட்ட காசோலை (கள்)" அல்லது "பி டி ஸி கள்" என்ற வெளிப்பாட்டிற்கு, ஒவ்வொரு தவணை தேதியை பொருந்தும் தேதிகளில் தவணைத் தொகைக்கு நிறுவனத்தின் பெயரில் கடன் பெறுபவர் வரையப்படும் தவணை தொகைகளின் காசோலைகள் என்பது பொருள்.

j) "வட்டி விகிதம்" இந்த ஒப்பந்தத்தின் 2 வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி விகிதம் என்பது இந்த வெளிப்பாட்டின் பொருள் ஆகும்.

k) "திருப்பிச் செலுத்துதல்" என்ற சொல், கடன் தொகையின் அசல் தொகையை திருப்பிச் செலுத்துதல், அதன் மேல் வட்டி, அபராதக் கட்டணங்கள் உட்பட தவணைகளில் மூலம் அல்லது இல்லையெனில், பொறுப்பு மற்றும் / அல்லது வேறு எந்த கட்டணங்கள், காப்பீடு, கட்டணம் அல்லது மற்ற செலுத்தப்பட வேண்டிய நிலுவைகள் இந்த நிறுவனத்தின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் குறிப்பாக பொருள் கொண்டு, கடன் தீர மெதுவாக நிலைமாறுதலைப் பற்றி இந்த ஒப்பந்தத்தின் 6 வது பிரிவில் கொடுக்கப்படுள்ளது என்று பொருள்படும்.

l) "அட்டவணை" என்பது இந்த ஒப்பந்தத்தின் அட்டவணை ஆகும் என்று பொருள்படும்.

m) "வரவேற்பு கடிதம்" என்ற சொற்றொடரின் பொருள், இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றிய பிறகு, கடன் வாங்குபவருக்கு நிறுவனம் வழங்கிய கடிதம், நிலுவைத் தேதிகள், ஒவ்வொரு நிலுவைத் தேதியிலும் செலுத்த வேண்டிய தவணைகள், தவணை செலுத்தும் கால இடைவெளி மற்றும் ஒவ்வொரு தவணையிலும் செலுத்த வேண்டிய அசல் மற்றும் வட்டி தொகை.

**1. கடன் நிபந்தனைகள்:**

a) இங்கே குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் படி அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தொகையை (கடன் தொகையை), சொத்து கொள்முதல் / மறுநிதியிடுதல் நோக்கத்திற்காக, கடன் பெறுபவரிடம் கடன் வழங்குவதற்கு நிறுவனம் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறது.

b) இந்த உடன்படிக்கை முன் வரையறுக்கப்பட்ட ஒரு விதத்தில் முடிக்கப்பட்டால் மட்டுமேயன்றி, இந்த ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன், கடன் காலத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட காலத்திற்கு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் (முதல் தவணைத் தேதி) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்க வேண்டும் மற்றும் கடன் பெறுபவர் மற்றும் உத்தரவாததாரர் இந்த ஒப்பந்தத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள விதிகளின் படி கூட்டாக மற்றும் பலவாறாக மீதமுள்ள தொகைகளை திருப்பிச் செலுத்த வேண்டும்.

2. **வட்டி:**

a) இதன்படி இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கடன் தொகை மீதான வட்டி விகிதம் இருக்கவேண்டும் மேலும் கடன் வழங்கப்பட்ட தேதியிலிருந்து அதை செலுத்துவது கடன் பெறுபவரின் பொறுப்பைச் சார்ந்தது.

b) இதன்படி இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கடன் தொகை மீதான வட்டி விகிதம் கடன் வசதி காலத்தின் போது நிலையானதாக இருக்கும். எனினும், நிறுவனம் தனது விருப்பப்படி, அவ்வப்போது, மேல்நோக்கி அல்லது கீழ்நோக்கி, ஒப்பந்தத்தின் வாழ்வாதாரத்தின் போது கடனுக்கு பொருந்தக்கூடிய வட்டி விகிதத்தை மதிப்பீடு செய்ய உரிமை உண்டு. அத்தகைய மாறுபாடு (கள்) அனுமதி கடிதத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்கும், மேலும் கடன் பெறுபவரிடம் தெரிவிக்கப்படும் மேலும் கடன் பெறுபவரைக் கட்டுப்படுத்தும்.

c) வட்டி நாளுக்கு நாள் தொகுக்கப் பெறும் மற்றும் மாதாந்திர அடிப்படையில் கணக்கிடப்படுகிறது அல்லது கடந்துவிட்ட நாட்களின் உண்மையான எண்ணிக்கையின் மீது கணக்கிடப்படும், இது நிகழ்வில் மாறும்.

d) இந்த உடன்படிக்கை அல்லது சொத்து தொடர்பான எதுவாக இருந்தாலும், பின்விளைவு அல்லது வருங்கால விளைவு என்பதைப் பொறுத்து வரிகள், செஸ்கள், உரிமக் கட்டணங்கள், வட்டி மீது விதிக்கப்படும் அனைத்து தீர்வைகள், பிற வரிகள், காப்பீட்டு பிரீமியம் மற்றும் பிற கட்டணங்கள் / செலவுகள் கடன் பெறுபவர் செலுத்த வேண்டும் மற்றும் நிறுவனம் அத்தகைய பணம் ஏதேனும் செலுத்துமானால், நிறுவனம் இதைப்பற்றிய சரியானத் தகவலை தெரிவித்த 3 நாட்களுக்குள் கடன் பெறுபவர் நிறுவனத்திற்குத் திருப்பிச் செலுத்துவார். கடன் வாங்கியவர் அந்தத் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறினால், நிறுவனம் செலுத்திய தேதியிலிருந்து கடன் வாங்கியவர் அந்தத் தொகையை நிறுவனத்திற்கு உண்மையான திருப்பிச் செலுத்தும் தேதி வரை அபராதக் கட்டணம் வசூலிக்கப்படும்.

e) இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் வாங்குதல் என்பது ஒரு வர்த்தக பரிவர்த்தனை ஆகும், மேலும் கடன் பெறுபவர் கடும் வட்டி வசூலிப்பது அல்லது வட்டி வசூலிப்பது தொடர்பான பிற சட்டங்களின் கீழ் எந்தவொரு பாதுகாப்பையும் இழப்பார்.

f) வட்டி கணக்கிடுதல் - இந்த தவணையில், அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வட்டி விகிதத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும் முதன்மை மற்றும் வட்டியை நிறுவுதல் ஆகும் மேலும் இது குறையும் இருப்பில் அருகில் உள்ள ரூபாய்க்கு முழுமையாக்கப்படும்.

3. **ஆதார கட்டணங்கள்:**

கடன் ஒப்புதல் அளிப்பதற்காக நிறுவனத்திடம் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் நேரத்தில் கடன் பெறுபவரால் ஒப்புக் கொள்ளப்பட்டதைப் போல நிறுவனத்திற்கு ஆதார கட்டணத்தை செலுத்துவதற்கு எந்தவொரு கட்டாயமும் அல்லது தகாநிலை வற்புறுத்தல் இல்லாமல் கடன் பெறுபவர் தனது ஒப்புதலை வெளிப்படுத்தினார். இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ள கட்டணம் கடன் ஒப்புதல் அளித்ததற்கு பின்னும் கடன் பெறப்படவில்லை என்றாலும் அல்லது நிறுவனம் கடனை வழங்காவிட்டாலும் அல்லது வேறு எந்த சூழ்நிலையிலும் கடன் பெறுபவருக்கு செலுத்த முடியாது.

4. **வழங்கல்:**

aa) கடன் பெறுபவர் அவரது விருப்பப்படி நிறுவனத்தின் மூலம் கடன் வழங்குவதற்கான வழிமுறையை குறிக்க வேண்டும். இருப்பினும், இந்த உடன்படிக்கையின் கீழ் நிர்ணயிக்கப்பட்டவாறு கடன் பெறுபவருக்கு வழங்கப்படும் முடிவுசெய்யப்பட்ட தொகையை, வழங்குவதற்கான வழிமுறையைத் தீர்மானிக்க நிறுவனத்திற்கு தனிப்பட்ட சுதந்திரம் உண்டு. புதிய சொத்துக்களை கொள்முதல் செய்யும்போது, கடன் தொகையானது, நிறுவனத்தின் விருப்பத்தின்படி, நேரடியாக விற்பனையாளர்/உற்பத்தியாளருக்கு நிறுவனத்தால் வழங்கப்படும், மேலும் அத்தகைய கடன்களை கடன் பெறுபவருக்கு வழங்குவதாகக் கருதப்படும். பயன்படுத்தப்பட்ட சொத்து (கள்) வாங்கும்போது, நிறுவனம் பணம் செலுத்துவதற்கான வழியை தீர்மானிப்பார்; அதாவது, சொத்தின் உரிமையாளர் / விற்பனையாளர் அல்லது வியாபாரி அல்லது கடன் பெறுபவரிடம் மேலும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் நிர்ணயிக்கப்படும் விதமாக அத்தகைய கடன்களை கடன் பெறுபவருக்கு வழங்குவதாகக் கருதப்படும். மறுநிதியளித்தலின் பட்சத்தில், நிறுவனத்தால் தீர்மானிக்கப்பட்ட விதத்தில் கடன் பெறுபவருக்கு ஆதரவாக நிறுவனத்தால் வழங்கப்படும். கடன் பெறுபவரின் சார்பில் வேறு எவருக்கும் வழங்கப்படும் இது போன்ற அனைத்து வழங்கல்களும் தனக்கு செலுத்திய கடனாக கடன் பெறுபவரால் கருதப்பட்டு இதன் மூலம் கடன் பெறுபவர் அதை ஏற்றுக்கொள்கிறார்.

b) நிறுவனத்தால் கடன் வழங்குவதற்கு முன்னர், கடன் பெறுபவர் சொத்துக்களை வாங்குவதற்கு முன் பணமாக அவருடைய பங்களிப்பை செலுத்தியதை நிரூபிக்கும் ஆவணங்களை அவர் வழங்கவேண்டும்.

c) இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் கடன் பெறுபவருக்கு நிறுவனத்தின் அனைத்து வழங்கல்களும் காசோலை மூலமாக முறையே குறுக்கில் கோடிடப்பட்டு "ஏ/சி பேயீ ஒன்லி" என்று குறிக்கப்பட்டிருக்கும் அல்லது நிறுவனத்தின் தனிப்பட்ட விருப்பத்தின் படி, இந்திய வங்கி முறையின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி பரிமாற்றத்தின் வேறு ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகள், அல்லது டிமாண்ட் டிராஃப்ட் மூலம் வழங்கப்படும் . சேகரிப்பு கட்டணங்கள் அல்லது அத்தகைய இதர கட்டணங்கள் ஏதேனும் இருந்தால், அத்தகைய காசோலைகள் அல்லது வேறு ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகள், கடன் பெறுபவர் அல்லது அவரது வங்கியால் காசோலை பயணப்படும் நேரம் / சேகரித்தல் / வங்கிக்கணக்கில் மெய்ப்பிக்க எடுக்கப்பட்ட நேரம் எதுவாக இருந்தாலும் கடன் பெறுபவரால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

d) கடன் பெறுபவர் இதன்மூலன் ஒப்புக்கொள்வதாவது, கடன் தொகை மெய்ப்பிக்கும் தேதி எதுவாக இருந்தாலும், வழங்கல் நாளானது காசோலையில் குறிப்பிட்டுள்ள நாளாகவோ அல்லது கடன் பெறுபவரின் வங்கி கணக்கில் நேரடியாக என் ஈ எஃப் டி / ஆர் டி ஜி எஸ் மூலம் நிறுவனம் கடனளிக்கும் தேதியாக இருக்கலாம் என்பதாகும்.

e) கடன் பெறுபவர், நிறுவனத்தின் ஒப்புதல் இல்லாமல் மேலும் தேவையான ரத்து செய்யும் கட்டணம் செலுத்தாமல் எக்காரணம் கொண்டும் பணம் வழங்குவதை ஏற்க மறுக்க முடியாது.

f) எந்த காரணத்திற்காகவும், கடன் பெறுபவர் ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டுமானால், கடன் வழங்கப்பட்ட பின், ஆனால் முதல் தவணைத் தேதிக்கு முன், அதனை நிறுவனம் தனது சொந்த விருப்பப்படி கருத்தில் கொள்ளலாம். இந்நிகழ்வில், நிறுவனம் ஒப்பந்தத்தை ரத்து செய்ய ஒப்புக்கொண்டால், அதன்படி கடன் பெறுபவர் வருடத்திற்கு 18% என வட்டியுடன் அல்லது கடன் பெறுபவர் கடன் தொகை வழங்கப்பட்ட தேதியிலிருந்து முழுமையாக திருப்பிச் செலுத்தும் தேதி வரையிலான கடன் தொகை மீதான ரத்து செய்யும் கட்டணம் கடன் பெறுபவருக்குத் தெரிவிக்கப்பட்ட இது போன்ற பிற விகதத்தையும் சேர்த்து கடன் தொகையை செலுத்தவேண்டும்.

5. **முன் நிபந்தனைகள்:**

பின்வரும் முன் நிபந்தனைகள் ("முன் நிபந்தனைகள்") நிறைவேற்றப்பட்டால், கடன் தொகையானது கடன் பெறுபவருக்கு நிறுவனத்தால் வழங்கப்படும். கடன் பெறுபவர்/ உத்திரவாதமளிப்போர், இதன் கீழ் எழுதப்பட்ட (ஒப்பந்தத் தேதி) அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியின்படி, அல்லது நிறுவனத்தால் நீட்டிக்கப்பட்ட அத்தகைய தேதிக்குள் முன் நிபந்தனைகளுடன் இணங்க வேண்டும். அத்தகைய தேதிக்குள் முன் நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறினால் நிறுவனம் கடன் வழங்கலை மறுக்க நேரிடலாம் அல்லது எந்தக் காரணத்திற்காவது அல்லது விதிவிலக்கான சூழ்நிலைகளில், ஏற்கனவே வழங்கப்பட்ட தொகையானது, முழுவதுமாக நிறுவனத்தால் திரும்பப் பெறப்படும். கடன் பெறுபவரால்/ உத்திரவாதமளிப்போரால் நிறைவேற்றப்பட வேண்டிய முன் நிபந்தனைகளாவன:

a) இந்த ஒப்பந்தத்தில் உள்ள கடன் பெறுபவரின் /உத்திரவாதமளிப்பவரின் பிரதிநிதித்துவமும் உத்தரவாதங்களும் உண்மைதான் (i) இந்தத் தேதியிலிருந்து, மற்றும் (ii) திட்டமிடப்பட்ட தொகை வழங்கல் தேதியன்று (அந்தத் தேதியில் செய்யப்பட்டது போல்) / கடன் கிடைக்கப்பெறும்;

b) நிறுவனத்திற்குத் தேவை என்றால், நிறுவனத்திற்கு ஏற்கத்தக்க உத்திரவாதம்/கள் நிறுவனத்திற்கு ஆதரவாக செயல்படுத்தப்பட வேண்டும்;

c) கடன் பெறுபவர் நிறுவனத்திற்கு பின் தேதியிடப்பட்ட காசோலைகளை / ஈ சி எஸ் மாண்டேட்ஸ் / ஏ சி ஹெச் /என் ஈ எ.்.ப் டி / போன்ற மற்ற பொருந்தக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்கள் அல்லது சரியான முறையில் நிறுவனத்திற்குத் தேவைப்படும் ஆவணங்களை ஒப்படைத்து மற்றும் செயல்படுத்தியிருக்கலாம்;

d) நிறுவனத்திற்கு ஆதரவாக அத்தகைய பிணையை கடன் பெறுபவர்/உத்திரவாதமளிப்பவர் உருவாக்கி இருப்பின், நிறுவனத்தால் ("பிணையம்") ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கலாம். கடன் பெறுபவர் /உத்திரவாதமளிப்பவர் வில்லங்கம், மீள்உரிமைகள் மற்றும் உரிமை மூல குறைபாடுகள் ஆகியவை இல்லாத அத்தகைய பிணைக்கு ஒரு தெளிவான, செல்லுபடியாகும் சந்தைப்படுத்தக்கூடிய உரிமை மூலத்தை வைத்திருக்க வேண்டும். கடன் பெறுபவர் / உத்திரவாதமளிப்பவர் இந்த பிணையம் ஏற்படுத்துவது சம்பந்தமான அனைத்து பதிவுகள் மற்றும் தாக்கல்களை செய்ய நேரிடும் பொருட்டு, பொருந்தக்கூடிய சட்டத்தின் கீழ் அத்தகைய பினணயை உருவாக்கப்படுதலில், கடன் பெறுபவர்/உத்திரவாதமளிப்பவர் எந்த பதிவுகள் மற்றும் தாக்கல்களையும் செய்யவேண்டும். மேலும் கடன் பெறுபவர் / உத்திரவாதமளிப்பவர் அத்தகைய பினணயை உருவாக்குவதற்கு எந்தவொரு ஒப்புதலும் தேவைப்பட்டாலும், அத்தகைய பினணயை உருவாக்கப்படுவதற்கு முன்பே அத்தகைய ஒப்புதல்கள் அனைத்தையும் பெற்றுள்ளதாக கடன் பெறுபவர் /உத்திரவாதமளிப்பவர் உறுதிப்படுத்த வேண்டும்;

e) கடன் பெறுபவர் /உத்திரவாதமளிப்பவர் மற்றும் /அல்லது பிற நபர்களால், மற்ற ஆவணங்களும் நிறைவேற்றப்பட்டு மேலும் அத்தகைய மற்ற நடவடிக்கைகளை நிறைவேற்றுவதோடு நிறுவனத்திற்குத் தேவைப்படும் மற்ற ஆவணங்கள் செயல்படுத்தப்படுகிறது.

f) தவறிழைக்கும் தருணமின்றி இருப்பது: விதி 10 இல் வரையறுக்கப்பட்ட தவறிழைக்கும் தருணம்நிகழ்ந்திருக்காது, அத்தகைய தருணம் நிகழாது தொடரவேண்டும்.

g) முன் தவணைமுறைகள்: இதன் பின் நிறுவனத்தால் குறிப்பிடப்படப்பட்டுள்ள எந்த நேரத்திலும், அல்லது ஒப்பந்தம் செயல்படுத்தப்பட்ட நேரம் ஏதாவதொன்றில் அட்டவணை / களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அத்தகைய எண்ணிக்கையினால் ஆன தவணையை நிறுவனத்திற்கு முன்கூட்டியே செலுத்த கடனளிப்பவர் ஒப்புக்கொள்கிறார். இந்த ஒப்பந்தத்தின் மற்ற விதிகளுக்கு உட்பட்டு, கால அட்டவணையில் அமைக்கப்பட்டுள்ள விதத்தில் தவணைக்கு ஏற்றவாறு முன் தவணை சரிசெய்யப்படும். முன் தவணைகளின் பொருட்டு எந்தவொரு வட்டி செலுத்துவதற்கு நிறுவனம் பொறுப்பாகாது.

6. **திருப்பிச் செலுத்துவது:**

a) தாமதமின்றி அல்லது தவறுதல் இன்றி இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் பெறுபவர் நிறுவனத்தின் மூலம் பணம் செலுத்துவதற்கான அனைத்து தொகையையும் நிறுவனத்திற்கு கடன் பெறுபவர் செலுத்த வேண்டும்,. இந்த நேரத்தில் ஒப்பந்தத்தின் சாராம்சத்திற்கேற்ப கடன் வழங்குவதற்கு அவசியமான ஒரு நிபந்தனையாக கடன் பெறுபவர் திருப்பிச் செலுத்துவதற்கான கால அட்டவணையின்பேரில் கடுமையான இணக்கத்தை ஒப்புக்கொள்கிறார்.

b) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் படி தவணை முறையில் கடன் பெறுபவரால் திருப்பிச் செலுத்தப்படும். மேலே குறிப்பிட்டுள்ள திருப்பிச் செலுத்துதல் அட்டவணையின்படி, நிறுவனத்தின் உரிமையில் பங்கம் இல்லாமல் இந்த ஒப்பந்தத்தின் கீழ் வரையறுக்கப்பட்டபடி பிற கட்டணங்கள் மற்றும் வட்டியுடன் முழு கடனைநிறுவனம் கோரும் போதுதிருப்பிச் செலுத்த வேண்டும். மேலும், நிறுவனத்தின் உரிமையில் பங்கம் இல்லாமல் தவணைகள் மீதான கணக்கீடு / பொருத்துதல், ஒரு வேளை எந்தக் கட்டதிலாவது தவணையைத் தவறாக கணக்கிடப்பட்டிருப்பதைக கண்டறிவது உட்பட, தவணைகள் மீதான கணக்கீட்டு அளவு மற்றும் அதன் மீதான வட்டி அதன்பின் மீண்டும் கணக்கிடப்படும். மேலும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தவணையானது நிறுவனத்தின் உரிமைக்கு எந்த பங்கமும் ஏற்படுத்தாது, மேலும் நிறுவனம் பொருந்தும் என்று கருதினால், ஒப்பந்தத்தை முடிக்கும் உரிமை உள்ளது, அவ்வாறெனில் அனைத்து கட்டணங்கள் மற்றும் நிலுவை

தவணைகளும் ஏற்கனவே கட்ட வேண்டிய தேதியில் கட்டப்படாமல் இருக்கும் பொருட்டு, வருங்கால தவணைகளும் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் தள்ளுபடிக்கு உட்பட்டு, அனைத்து எதிர்கால தவணைகளுடன் மற்றும் பிற கட்டணங்கள் ஏதேனும் இருப்பின் அதனை செலுத்தும் படி வலியுறுத்தலாம்.

c) நிறுவனத்திற்குக் கடன் வாங்கியவர் செலுத்த வேண்டிய அனைத்துத் தொகைகளும், குறிப்பிட்ட தேதிகளில் அல்லது அதற்கு முன் எந்தக் கழிவும் இல்லாமல் செலுத்தப்பட வேண்டும், தவறினால் கடன் வாங்கியவரின் கடன் கணக்கு சிறப்புக் கணக்கு (SMA) / செயல்படாத கணக்கு (NPA) அல்லது இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) பொருந்தக்கூடிய வழிகாட்டுதல்களின்படி மற்ற வகைகளின் கீழ் வகைப்படுத்தப்படும். இன்றைய நிலவரப்படி, SMA மற்றும் NPA கணக்கு வகைகளை வகைப்படுத்துவதற்கான அடிப்படையும் அதற்கான உதாரணமும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடன் வாங்குபவரின் கடன் கணக்கு ஒருமுறை NPA/SMA என வகைப்படுத்தப்பட்டால், வட்டி மற்றும் நிலுவையில் இருக்கும் அசல் முழுவதையும் கடன் வாங்கியவர் திருப்பி செலுத்திய பிறகு மட்டுமே அந்த கணக்கு வழக்கமான கணக்காக மாற்றப்படும்.

d) விற்பனையாளர் / உற்பத்தியாளருடனோ அல்லது அவருக்கு எதிராகவோ அல்லது சொத்தை ஒப்படைக்கும் போதோ அல்லது சொத்தின் மீதோ எந்த சர்ச்சைகள், ஆட்சேபனைகள், ஆர்ப்பாட்டங்கள், புகார்கள் அல்லது மனக்குறைகள் இருந்தபோதிலும் விற்பனையாளர் / உற்பத்தியாளரால் கடன் பெறுபவருக்கு சொத்து வழங்கப்பட்டோ இல்லாமலோ, ஏதுவாக இருந்தாலும், அட்டவணையில் குறிப்பிட்டவாறு தவணைகளை செலுத்துவது கடன் பெறுபவரின் கடமையாகும்.

e) அபராதக் கட்டணம் வசூலிக்கப்படுவது, எவ்வாறாயினும் கடனை வழங்குவதற்கான ஒரு அவசியமான நிபந்தனையான திருப்பிச் செலுத்துதல் அட்டவணையுடன் கண்டிப்பான இணக்கத்துடன் கடன் பெறுபவரின் கடமைகளை விடுவிப்பதில்லை.

f) கடன் பெறுபவர், மாதாந்திர தவணைகளை, அசல் மற்றும் வட்டி என்னும் பிரிவையும் அதனை கணக்கிடுவதற்கான நிறுவனத்தின் முறையை கவனமாக படித்து, புரிந்து கொண்டு, ஒப்புக் கொண்டார்.

g) ஒரு விடுமுறை நாளன்று செலுத்த வேண்டிய தேதி வந்தால், கட்டணமானது உடனடியாக அதற்கு முன் வரும் வேலை நாளில் செலுத்தப்படவேண்டும்.

**7. தவணைகளின் கட்டணம் செலுத்தும் முறை:**

a) இதங்கீழ் ருறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும் நிறுவனமானது நிலைக் கட்டளைகள் (ECS) அல்லது அத்தவைய வேரு வகையான நிறுவனத்தால் அவ்வப்போது அங்கீகரிக்கப்பட்ட முறைகளின் வாயிலாக வங்கிக் கணக்கில் நேரடி பற்று மூலமாகவோ, பின் தேதியிட்ட காசோலை மூலமாகவோ, ரொக்க பணமாகவோ, அல்லது கேட்பு வரைவோலையாகவோ, தவனைகளை வசூலித்துக் கொள்ளலாம்.. ஒப்பந்தத்தில் வேறு எங்கும் எதுவும் குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஏசிஹெச்/ஈசிஎஸ்/ஆர்ஈசிஎஸ்/ஈஎஃப்டி வசதிகள் மூலமாக மட்டுமே கடனை திருப்பிச் செலுத்த விதிமுறைகள் அனுமதிக்கும் பட்சத்தில், நிறுவனம் அத்தகைய வசதிகளின் மூலம் மட்டுமே பணம் செலுத்துவதை ஏற்க வேண்டும்.

b) தவணை கட்டணங்களுக்கு பின் தேதியிட்ட காசோலைகளும் / ஈ சி எஸ் அல்லது ஏசிஹெச் கட்டளைகளை கடன் பெறுபவர் நிறுவனத்திற்கு வழங்கவேண்டும். இத்தகைய பின் தேதியிட்ட காசோலைகள் அல்லது கட்டளைகளை சமர்ப்பித்தல் ஆகியவை நிறுவனத்திற்கு கடன் பெறுபவரால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற மற்றும் மாற்ற முடியாத அதிகாரமாக கருதப்பட்டு, அத்தகைய காசோலைகள் / கட்டளைகளை சமர்ப்பித்தலானது அந்தந்த தேதிகளில் வழங்கப்பட்டு, அந்தந்த காசோலைகளில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் சமர்ப்பிக்கப்படலாம் என்றும் மற்றும் காசோலைகள் / கட்டளைகள் முதல் முறை அளித்தவுடன் மதிப்பளிக்கப்படுமென கடன் பெறுபவர் உத்தரவாதம் அளிக்கிறார். எந்த காரணத்திற்காகவும் ஏசிஹெச் அல்லது ஈசிஎஸ் ஆணை / பிடிசி (கள்) எந்தவொரு காரணத்தினாலும் சமர்ப்பிக்கப்படாமல் இருந்தால், இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்த வேண்டிய மற்றும் செலுத்தக்கூடிய மாதாந்திர தவணை அல்லது பிற தொகைகளை செலுத்த வேண்டிய கடன் பெறுபவரின் பொறுப்பை பாதிக்காது.

c) பி டி சி க்கள் / ஈ சி எஸ் கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், கடன் பெறுபவருக்கு அறிவிப்பு அல்லது எச்சரிக்கை அல்லது நினைவூட்டல் எதுவும் நிறுவனம் தருவது இல்லை என்பதை கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார்.

d) 7(a) விதிமுறைக்கு இணங்க கடனாளரால் வழங்கப்பட்ட ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேலோ அல்லது அனைத்து பி டி சி க்கள் / ஈ சி எஸ்/ ஏ சி ஹெச் கட்டணங்கள்.

   (i) நிறுவனத்தின் பாதுகாவலில் இருக்கும் போது, தொலைந்து, அழிக்கப்பட்டு அல்லது தவறிப் போயிருக்கலாம், அல்லது

   (ii) மரணம், நொடித்துபோவது, பைத்தியம், இல்லையெனில் கையெழுத்திட்டவர்களுள் அல்லது கையெழுத்திட்ட ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் (ஒன்றுக்கு மேற்பட்ட) வழங்கப்பட்ட அதிகாரம் முடிக்கப்படும் நிலைஅல்லது கடனாளியின் வங்கியானது கலைப்பு அல்லது தற்காலிக தடைக்கு உட்படுதல் போன்ற எந்தவொரு நிபந்தனையின், காரணத்திற்காகவும் பணமாகப் பெற்றுக்கொள்ள முடியாமல் போகலாம், பின்னர் இத்தகைய நிகழ்வில், கடன் பெறுபவர், அத்தகைய இழப்பு, அழிவு அல்லது தவறிப் போனதற்கான(இதில் எதுவாக இருந்தாலும்) தகவலை நிறுவனத்திடமிருந்து பெற்றபின் அல்லது உடனடியாக அந்த காசோலையையோ அல்லது மேலே குறிப்பிட்டுள்ள காரணங்கள் எதுவாகினும் பணமாகப் பெற்றுக்கொள்ள முடியாத பட்சத்தில், அத்தகைய இழப்பு, அழிவு அல்லது தவறிப் போன அல்லது பணமாகப் பெற்றுக்கொள்ள முடியாதவற்றிற்கு பதிலாக போதுமான அளவிற்கு அத்தனை காசோலைகளும் நிறுவனத்திற்கு வழங்கி அல்லது நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான பொருத்தமான மாற்று ஏற்பாடு ஒன்றை உருவாக்க வேண்டும்.

e) எந்தவொரு காரணத்தினாலும் நிறுவனத்தால் எந்த காசோலைகளை சமர்பிக்க முடியவில்லை என்றாலும் கடன் பெறுபவர் அதை ஏற்றுக் கொண்டு புரிந்துகொள்கிறார் மேலும் எதுவாக இருந்தாலும் இதன் பொருட்டு கடன் பெறுபவருக்கு இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தவேண்டிய கடன் தொகையை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு எந்த வகையிலும் பாதிக்காது. எந்தவொரு காரணத்திற்காகவும் எந்த (கடன் பெறுபவரால் நிபந்தனைகளின்படி நிறுவனத்திற்கு அதன்கீழ் ஏற்கெனவே வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட வேண்டிய) காசோலை (கள்) யின், இழப்பு அல்லது சேதம், பணமாகப் பெற்றுகொள்ளாத புறக்கணிப்பு அல்லது தவிர்த்தல், தாமதம், ஆகியவற்றிற்கு எந்தவொரு வகையிலும் நிறுவனம் பொறுப்பேற்காது.

f) தேவைப்பட்டால், கடன் பெறுபவர், நிறுவனத்தினுடைய அனுமதியின் பெயரில், ஒவ்வொரு காசோலை மாற்றீட்டிற்கும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒரு தொகையை பரிமாற்றக் கட்டணங்களாக நிறுவனத்திற்கு செலுத்தியபின், ஒரு வங்கியில் வழங்கப்பட்ட மற்றும் வரையப்பட்டகாசோலைகளை மற்ற வங்கியிடம் உள்மாற்றீடு / இடமாற்றிக் கொள்ளலாம்.

g) வேறு எந்த உரிமைகள் அல்லது பரிவர்த்தனைகளுக்கும் பங்கம் இல்லாமல் நிறுவனம் இந்த உடன்படிக்கையின் கீழ் மற்றும் / அல்லது வழக்கமான சட்டத்தின் கீழ், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விகிதத்தின்படி ஒவ்வொரு சமர்பித்தலின் போதும் மறுக்கப்பட்ட ஒவ்வொரு பி டி சி / ஈ சி எஸ் க்கு காசோலை மறுக்கப்பட்டதற்கான கட்டணங்களை செலுத்துவது கடன் பெறுபவரின் பொறுப்பு. 1881 ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் நிறுவனத்தின் உரிமைகளுக்கு பங்கம் இல்லாமல், திருத்தப்பட்ட மற்றும் அவ்வப்போது நடைமுறையில் மற்றும் பிற தொடர்புடைய சட்டத்தின் விதிமீறலின் படி மறுக்கப்பட்ட காசோலை / ஈ சி எஸ் களுக்கு கட்டணம் விதிக்கப்படும்.

h) வெளியீடத்து காசோலைகள் மூலம் பணம் செலுத்துவதால், அவ்வப்போது நிறுவனத்தின் விருப்பப்படி திருத்தியமைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி காசோலை சேகரிப்பு கட்டணங்களை செலுத்துவது கடன் பெறுபவரின் பொறுப்பு.

i) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் நிறுவனத்தின் தனிப்பட்ட விருப்பப்படி மாறுதலுக்கு உட்பட்டவையாகும்.

j) ஒரு ஏமாற்றும் நோக்கத்துடன், திருத்தப்பட்ட மற்றும் அவ்வப்போது அமலில் உள்ள 1881 ஆம் ஆண்டின் மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் வழக்கைத் தவிர்க்கவோ கடன் அல்லது அவரது கடனில் எந்த பகுதியும் நிலுவையில் இருக்கும் மற்றும் கட்டப்பட வேண்டி இருக்கும் பி டி சி / ஈ சி எஸ் அல்லது ஏசிஹெச் கட்டணங்களைப் பொறுத்தவரை, பணம் செலுத்துதல் கட்டளைகளை ரத்து செய்யவோ அல்லது நிறுத்தவோ கடன் பெறுபவருக்கு உரிமை கிடையாது மற்றும் நிறுவனம் கடன் பெறுபவர்களுக்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு உரிமையுண்டு.

k) இந்த ஒப்பந்தத்தின் விதிகளின்படி, கடனை முழுவதும் அடைப்பது, மேலும் முன்கூட்டியே கடன் அடைக்கும் பட்சத்தில், கடன் பெறுபவர், 60 நாட்களுக்குள் நிறுவனத்திடம் கொடுக்கப்பட்ட பி டி சி க்களைச் சேகரிக்க வேண்டும், தவறும்பட்சத்தில் கடன் பெற்றவரிடம் எந்த தகவலும் தெரிவிக்காமல் அதனை அழிக்க நிறுவனத்திற்கு உரிமை உண்டு.

**8. பிணையம்:**

a) கடன் பெறுபவருக்கு கடன் வசதி வழங்க ஒப்புதல் அளித்த அல்லது ஒப்புதல் அளிக்க சம்மதித்த நிறுவனத்தின் பரிசீலனையில், இதன் கீழ் விதிக்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, கடன் பெறுபவர் இதன்மூலம் நிறுவனத்தின் பெயரில் சொத்து மீது பிரத்யேகமாக முதல் பொறுப்பை ஏற்படுத்தி அதன் மூலம், அதன் அனைத்து பாகங்கள் சொத்திலோ அல்லது அதனுடன் ஏற்படும் கூடுதலான மாற்றங்கள், தற்போதைய அல்லது எதிர்கால மற்றும் முன்னேற்றங்கள், புதுப்பிப்புகள் மற்றும் மாற்றங்கள் செய்யப்பட்டால் அல்லது சொத்து மீது செய்யப்படும் மாற்றங்களை உள்ளடக்கியதாகும். கடன் பெறுபவர் அத்தகைய கூடுதல் ஆவணங்களை ஏற்படுத்த மற்றும் / அல்லது கோர்வை செய்து நிறைவேற்றவும் மற்றும் / அல்லது சட்டத்தில் அவசியமான வகையில் அத்தகைய அதிகாரத்தை பதிவுசெய்து கொள்ள அல்லது நிறுவனத்திற்கு சொத்தின் மீது உண்டான பாதுகாப்பை மேலும் உறுதிசெய்வது கொள்வதற்காக மேற்கொண்டு ஒப்புக்கொள்கிறார்.

b) சொத்தினை கடன் பெறுபவரிடம் ஒப்படைப்பது அல்லது ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது, எது முன்னதோ, அதன்படி உடனடியாக சொத்தானது அடைமானமாக்கப்படும் என்று கருதப்படுகிறது.

c) சொத்தானது ஒரு வாகனமாக இருப்பின், கடன் பெறுபவர் தனது பெயரில் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் பதிவு செய்ய வேண்டும், மேலும் நிறுவனத்துடன் வாகனத்தின் அடைமானத்தை முறையாக அங்கீகரித்து மற்றும் பதிவு சான்றிதழில் பதிவு செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

d) நிறுவனத்தால் சொத்தானது எழுத்துமூலம் வெளியிடப்படும் வரை, கடன் பெறுபவர், விற்பனையாளர் அல்லது நிறுவனத்தின் எந்த முன்னுரிமையும் இல்லாமல் எந்தவொரு விதத்திலும் சொத்து, அல்லது எந்தவொரு பகுதியிலுமே எந்தவிதமான ஈட்டு, கட்டணம், அடமானம், அதில் அடகு வைத்தல் மீள் உரிமை அல்லது வில்லங்கம் ஆகியவற்றை ஏற்படுத்தவோ, விற்கவோ, மாற்றவோ அல்லது உருவாக்கவோ கூடாது. கடன் வாங்கியவர், வாடகைக்கு விடுதல், குத்தகைக்கு விடுதல், விடுப்பு மற்றும் உரிமம் அல்லது சொத்து அல்லது அதன் எந்தப் பகுதியையும் கையாளுதல் அல்லது தீங்கு விளைவிக்கும் எந்தவொரு செயல், செயல்கள், விவகாரம் அல்லது செயல்திறன் ஆகியவற்றைச் செய்யவோ அல்லது பாதிப்பு ஏற்படுத்தவோ கூடாது, அல்லது எந்த வகையிலும் சொத்துரிமை மீது நிறுவனத்தின் உரிமைகள் மற்றும் நலன்களை பாரபட்சம் காட்டுவது. சொத்தானது பதிவு செய்ய இயலாத வாகனம் / உபகரணமாக இருக்கும்பட்சத்தில், நிறுவனம் தேவைஎன்று கருதும் பட்சத்தில் அந்த பதிவு செய்ய இயலாத வாகனம் / உபகரணத்தின் அசல் விலைப்பட்டியலில் அவசியமான மேலொப்பம் இடப்பட்டிருப்பதை கடன் பெறுபவர் உறுதி செய்ய வேண்டும். கடன் பெறுபவர் ஒரு

நிறுவனமாக இருந்தால், சட்டப்படியான கால வரம்புக்குள் நிறுவனப் பதிவாளரிடம் பொறுப்பினை அது பதிவு செய்து, குறிப்பிட்ட காலத்திற்குள் நிறுவனத்தின சார்பாக பொறுப்பு பதிவு சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.

e) இந்த உடன்படிக்கை நிறைவேற்றப்பட்ட நேரத்தில் கடன் பெறுபவருக்கு சொத்தானது ஒப்படைக்கப்படவில்லை அல்லது சொத்தானது வாகனம் என்னும் பட்சத்தில் பதிவு/அடமானக் குறிப்பு உட்பட வாகனம் என்னும் பட்சத்தில், எழுத்தின் மூலம் கடன் பெறுபவர் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட மற்றும் / அல்லது பதிவு செய்யப்பட்ட ஒரு வாரத்திற்குள் தெரிவிக்க வேண்டும் மேலும் அத்தகைய விவரங்கள், இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றும் காலப்பகுதியிலேயே இணைக்கப்பட்டதாகக் கருதி, இந்த அட்டவணையில் இணைக்கப்படும். கடன் பெறுபவர் அதன் விளைவாக ஒப்பந்தத்தை மாற்றுவதற்கான எந்த வேண்டுகோளையும் எழுப்ப முடியாது அல்லது செல்லுபடி நிலையைப் பற்றிய கேள்வி அல்லது சொத்து மீது நிறுவனத்திற்கு ஆதரவாக உருவாக்கப்பட்ட பொறுப்பின் நடைமுறைப்படுத்தும் விதம் குறித்தும் எந்த கேள்வியும் எழுப்ப முடியாது.

f) கடன் தொகை மேலும் அதன் வட்டிக்கான பிணையத்தை கடன் பெறுபவரால் நிறுவனத்திற்கு ஆதரவாக ஒரு கேட்புக் கடன் உறுதி ஆவணம் நிறைவேற்றப்பட்டது.

g) வட்டி, அபராதக் கட்டணம், செலவுகள், கட்டணங்கள் மற்றும் அனைத்து தொகைகள் உட்பட நிறுவனத்திற்கு கடன் பெறுபவரால் வழங்கப்பட்ட எந்தவிதமான பிற ஒப்பந்தங்கள் அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் அனைத்து தொகையையும் கடன் பெறுபவர் செலுத்தும் வரை சொத்தின் மீதான அடமானம் சிறப்பான செயல்பாட்டுடன் அமலில் இருக்கும் மேலும் இதன் கீழ் நிறுவனம் பிணையத்தை வெளியேற்ற ஒரு சான்றிதழை வெளியிடும் வரை விதிமுறைகளுக்கு இணங்குவதற்குரிய மற்றும் செல்லத்தக்கதாக இருக்கும்.

h) இறப்பு, நொடிப்பு, கடனாளிகளுடன் ஏற்பாடு செய்தல், உடல் ரீதியான அல்லது மனநல குறைபாடு, முடக்குதல் (தன்னார்வ அல்லது வேறுவிதமாக) அல்லது கடன் பெறுபவரால் எந்த இணைப்பு அல்லது சேர்ப்பு, புனரமைப்பு, மேலாண்மை, கலைத்தல் அல்லது தேசியமயமாக்கல் (ஒருவேளை) அல்லது கடன் பெறுபவரின் நிலையில் ஏற்படும் ஏதேனும் வேறு வகையான மாற்றம் ஆகியவற்றால் அடமான சொத்தானது பாதிக்கப்பட்டு, பலவீனமடைந்து அல்லது வெளியேற்றப்படமாட்டாது.

i) இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் பெறுபவரால் செலுத்தப்படும் தொகை மற்றும் உடனடியாக அனைத்தையும் திருப்பிச் செலுத்துதல் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடனாளியால் செலுத்தப்படும் ஒவ்வொரு தொகைக்கும், இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கட்டுப்பாடுகளும் நிபந்தனைகளும் கடனாளியின் செயல்திறன் மற்றும் கடைபிடிக்கப்படுவதற்கு உத்திரவாதமளிபோர் சார்பில் எந்தவித நிபந்தனையுமின்றி உத்தரவாதம் செய்கிறது. எந்தவொரு தொகையை அல்லது வேறு எந்த ஈடுபடுதல் அல்லது தோல்வி, விலக்குதல் அல்லது செலுத்துதல் அல்லது நிறுவனத்தால் அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்கு எதிராக தனது உரிமைகளைச் செயல்படுத்த இயலாமை ஆகியவற்றிற்கு நிறுவனத்தால் கடன் பெறுபவருக்குக் கொடுக்கப்பட்ட திரும்பி செலுத்தும் காலத்தை பொறுத்து உத்திரவாதமளித்தவர் அவர் வழங்கிய உத்தரவாதத்தில் இருந்து வெளியேறமாட்டார் என்று உத்திரவாதம் அளிக்கிறார். நிறுவனம் மற்றும் தன்னை பொறுத்தவரையில், உத்தரவாததாரர் கடனாளியுடன் இணைந்த பிரதான கடனாளி ஆவார் என்பதை உறுதிப்படுத்தி மேலும் எனவே, இந்திய ஒப்பந்த சட்டம், 1872 ஆம் பிரிவுகளில் 133,134, 139 மற்றும் 141, அல்லது வேறு ஏதேனும் விதிகள் ஆகியவற்றின் கீழ் உறுதியளிக்கப்பட்ட எந்தவொரு உரிமையையும் விட்டுக் கொடுக்க சம்மதிக்கிறார். எந்தவொரு ஒழுங்குமுறையிலும் கடன் பெறுபவர் / உத்தரவாததாரருக்கு எதிரான நடவடிக்கை எடுப்பதற்கு நிறுவனத்திற்கு உரிமை உண்டு மற்றும் உத்தரவாதம் அளிப்பவர் எந்தவொரு காரணத்திற்காகவும் நிறுவனத்தின் கோரிக்கையை அவர் கேள்வி கேட்க மாட்டார் என்பதை ஒப்புக்கொள்கிறார்.

j) நிறுவனம் தனது சொந்த விருப்பப்படி பொருந்தக்கூடியதாக கருதும் எந்த மூன்றாம் தரப்பினரிடமிருந்து உத்தரவாதம் (கள்) உட்பட அத்தகைய கூடுதல் பத்திரங்களை வழங்குமாறு கடன் பெறுபவரிடம் எந்த நேரத்திலும் நிறுவனம் கேட்கலாம். அத்தகைய ஒரு நிகழ்வில் கடன் பெறுபவர் கூடுதலான பிணையத்தை வழங்குவார், மேலும் அத்தகைய உடன்படிக்கைகள், செயல்கள், ஆவணங்கள், நிறுவனத்திற்குத் தேவைப்படும் அதிகார அளிப்பு ஆவணம்/கள் ஆகியவற்றை நிறைவேற்றுவார்., இந்த ஒப்பந்தத்தின் கீழ் நிறுவனத்திற்கு கடன் பெறுபவர் செலுத்த வேண்டிய மற்றும் அனைத்து நிலுவைத் தொகையும் முழுவதுமாக செலுத்தப்படும் வரை, கடன் பெறுபவர் ஒப்பந்தத்தை ரத்து செய்யவோ அல்லது அத்தகைய ஒப்பந்தங்கள், செயல்கள், ஆவணங்கள் முதலியவற்றை முறித்துக் கொள்ள மாட்டார் மேலும் நிறுவனத்திடமிருந்து அத்தகைய கோரிக்கை பெறப்பட்ட 7 நாட்களுக்குள் கடன் பெறுபவர் அதை நிறுவனத்திடம் அளிக்க மேற்கொள்கிறார்.

k) பிணையம், உத்திரவாதம் அல்லது எத்தகைய வேறு பிணையம் இருப்பினும் மற்றும் நிறுவனத்திற்கு வேறு எவ்வகையான உரிமைகள் மற்றும் தீர்வுகள் இருப்பினும் கடன் பெறுபவர் மற்றும் உத்தரவாதம் அளிப்பவர்; இந்த ஒப்பந்தத்தின் கீழ் நிலுவையில் இருக்கும் அனைத்து தொகையும் நிறுவனத்திற்கு செலுத்துவதற்காக அவர்கள் எப்போதும் தனிப்பட்ட முறையில் பொறுப்பாவார்கள் நிறுவனத்திற்க்கு கிடைக்கக்கூடிய வேறு எந்த உரிமைகள் அல்லது தீர்வுகள் தொடர்பாக அவர்களுடைய சொத்துக்கள் மற்றும் உடைமைகளுக்கு எதிராக அவை அமல்படுத்தப்படலாம்.

l) மேற்குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் இதற்கு மாறாக ஏதேனும் சொல்லப்பட்டிருந்தாலும், தவறிழைக்கும் தருணத்தில் கடன் பெறுபவர், அனைத்து அல்லது ஏதேனும் தொகையை செலுத்துதல் மற்றும் எந்த நேரத்திலும் அல்லது நிறுவனத்திற்கு கடன் பெறுபவர் எந்த நேரத்திலும் செலுத்தப்பட வேண்டியதாக இருக்கலாம், அத்தகைய தருணத்தில் கூடுதல் பிணையம் வழங்க ஒப்புக்கொண்டு மற்றும் சொத்து ஒரு அடமானம்/ பொறுப்பினை உருவாக்க அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடியும், நிறுவனத்திற்கு தேவையானபடி, நிறுவனத்தின் சார்பாகவும், அதற்கு தேவைப்படும் விதம் மற்றும் முறையிலும், முதல் மற்றும் பிரத்தியேக பொறுப்பினை உருவாக்க ஒப்புக்கொள்கிறார்.

m) கடன் பெறுபவர் ஒரு நிறுவனமாகவோ, அந்த அடமானம் ஏதாகிலும் கடன் பெறுபவர் மற்றும் உத்திரவாதமளித்தவர் இருவரும் அதை ஒப்புக்கொள்கிறார் மற்றும் மேற்கொள்கிறார் கடன் பெறுபவர் சொத்தின் மீது கட்டணம் வசூலிப்பதற்காக நிறுவன பதிவாளருடன் படிவம் சி ஹெச் ஜி-1 ஐ சமர்ப்பிப்பார்.

n) நிறுவனத்தில் உள்ள வேறு ஏதேனும் ஒப்பந்தங்களின் கீழ் எந்தவொரு கடனையும் கடன் பெறுபவர் அல்லது உத்திரவாதமளித்தவர் கடனாகக் கொண்டிருப்பின், அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி சொத்தின் மீதான கட்டணம் நிறுவனத்தால் தொடரப்படும் என்பதை கடன் பெறுபவர் மற்றும் உத்திரவாதமளித்தவர் இருவரும் அதை ஒப்புக்கொள்கிறார் மற்றும் மேற்கொள்கிறார். மேலும், நிறுவனத்துடன் கடன் பெறுபவர் மற்றும் உத்திரவாதமளித்தவர் மேற்கொண்டிருக்கும் ஏற்கனவே உள்ள அனைத்து ஒப்பந்தங்களும் அத்தகைய அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்தின் மீது தொடர்ந்து பொறுப்பினை பராமரிக்கவும், நிர்வகிப்பதற்கு உரிமையும் உண்டு என்பதை கடன் பெறுபவர் அல்லது உத்திரவாதமளித்தவர் அதை ஒப்புக்கொள்கிறார் மற்றும் மேற்கொள்கிறார்.

o) வேறு ஏதேனும் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி, நிறுவனத்தின் உரிமைகளுக்கு பாரபட்சம் இல்லாமல் இந்த ஒப்பந்தத்தின் 10 வது பிரிவில் அல்லது ஒப்புதல் கடிதத்தின் விதிமுறைகளின் மீறலின் பட்சத்தில் கடன் பெறுபவரால் ஒப்பந்தத்தின்கீழ் செலுத்தப்படவேண்டிய மொத்த தொகையையும் கடன் பெறுபவர் பொருத்தமான முறையில் வழங்கப்படும் எந்தவொரு பிணையினையும், நிறுவனம் முழுமையான விருப்பத்தினைக் கொண்டிருக்கும் மேலும் எந்தவொரு முறையிலும் பொருத்தமானது மற்றும் சரியானது என்று கருதி அதனைச் செயல்படுத்தலாம்.

p) பிணையை அமலாக்கப்படும்போது, எதாவது இழப்பு அல்லது மெய்பிக்கப்பட்டத் தொகை குறைவது அல்லது பிணை சொத்தின் மதிப்பு குறையும் பட்சத்தில் அதற்கு பதிலளிப்பது போன்றவற்றிற்கு நிறுவனம் பொறுப்பாகாது. கடன் பெறுபவரை எந்த விதத்திலும் சாராமல் நிறுவனமானது இதுபோன்ற விற்பனையை நடத்தும் மேலும் எந்தவிதமான இழப்பு/ சேதம் / உரிமைகளை கணக்கில் கொண்டு / நிறுவனத்தால் உரிமைகள் கணக்கில் கொள்ளப்படவில்லை போன்றவற்றினால் ஏற்படும் சொத்தின் மதிப்பு குறைபாடு ஆகிய காரணங்களுக்காக எனில் மேலும் மற்றும் கடன் வாங்கியவர் நிறுவனத்திற்கு எதிராக பெரிய தொகையினை ஈட்டியிருக்கலாம் என்றோ அல்லது பெற்றிருக்கலாம் என்றோ அல்லது மீதமுள்ள தொகையினை செலுத்துதலின் பொருட்டு எந்த விதமான புகார் எழுப்புவதற்கு எந்த உரிமையும் கோர முடியாது.

q) கடன் பெறுபவர் தனது கட்டுப்பாட்டில் உள்ள பிணைச் சொத்தின் எந்தவொரு அங்கீகாரமும், உரிமங்களும், பத்திரங்களும் அல்லது அடமானச் சொத்துடனும் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் கடன் வாங்கியவர் நிறுவனத்தின் நம்பிக்கை மற்றும் நன்மைக்காக வைத்திருக்க வேண்டும்.

9. **மாற்றம் மற்றும் கடன் மறு திட்டமிடல்:**

a) நிறுவனம் அதன் முழு விருப்பத்தின்படி எந்தவிதமான கடமையும் இல்லாமல், அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு அத்தகைய கூடுதல் காலங்களுக்கு வசதிகளை மறு ஆய்வு செய்வதற்கும் வசதிகளை புதுப்பிப்பதற்கும் உரிமையுள்ளது.

b) நிறுவனம் சொந்தமாக அல்லது கடன் பெறுபவரிடமிருந்து ஒரு வேண்டுகோளின் பேரில், அது பொருத்தமாக இருந்தால், கடன் வாங்கியவரின் முறையான அனுமதியுடன், மாற்ற அல்லது இத்தகைய முறையில் அத்தகைய அளவிற்கு தவணைகளின் மறு திட்டமிட அது முடிவு செய்யலாம், இந்த அட்டவணையில் ஏதேனும் குறிப்பிடப்பட்டிருந்தாலும் மேற்கூறப்பட்ட மாற்றம் அல்லது மறுதிட்டமிடல் அதன்படி கடன் பெறுபவர் திருப்பிச் செலுத்த வேண்டும். திருத்தப்பட்ட கட்டமைப்பின் படி பின் தேதியிட்ட காசோலைகளை / ஈசிஎஸ் அல்லது ஏசிஹெச் ஆணைகளை வழங்குதல் உட்பட திருத்தம் செய்யப்பட்ட தேவைகளுக்கு கடன் பெறுபவர் இணங்க வேண்டும்.

c) கடன் பெறுபவர் திருப்திகரமாக கடனை அடைத்த சான்றுகளின் அடிப்படையில், நிறுவனம் அதன் சொந்த விருப்பத்தின்படி, இங்கே வழங்கப்பட்ட கடனுக்கு மேல் கூடுதல் கடன்களை வழங்கலாம். நிறுவனத்தின் அவ்வப்போது நிலுவையில் இருக்கும் கடன் விதிமுறைகளின் படி நிறுவனத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட அத்தகைய ஆவணங்களை செயல்படுத்துவதன் மூலம் மட்டுமே கூடுதல் கடன்கள் வழங்கப்படும். இந்தப் பிரிவின் அடிப்படையில் கடன் பெறுபவருக்கு கூடுதல் கடன்களைக் கோர உரிமை இல்லை.

10. **தவறிழைக்கும் தருணங்கள்:**

பின்வரும் நிகழ்வுகள் ஒரு " **தவறிழைக்கும் தருணங்களை** " உள்ளடக்கலாம்: -

a) இதுநிறுவனத்தின் கோரிக்கையாக இருந்தாலும் இல்லையென்றாலும் நிலுவையாக மாறும்போது மற்றும் இங்கு அடங்கும் முறையில் நிறுவனத்திற்கு செலுத்தப்படவேண்டிய மற்ற பிற தொகை அல்லது கட்டணங்கள் அல்லது செலவுகள், கட்டணம், கடன் அல்லது ஏதேனும் தவணையை திருப்பிச் செலுத்துதல், போன்ற பொறுப்புகளில் கடன் பெறுபவர் அல்லது உத்திரவாதமளித்தவர் தவறி இருந்தால்; அல்லது

b) நிறுவனத்தின் கருத்துப்படி, கடன் பெறுபவருடன் தொடர்புடைய எந்தவொரு முக்கியமான தகவலையும் கடன் பெறுபவர் மறைத்து இருந்தால்; அல்லது

c) நொடித்துப்போதல், கலைப்பது, தானாக அல்லது வேறு வகையில், வணிகத்தில் தோல்வி, திவாலான ஒரு செயலுக்கான ஆணையம், கடன் பெறுபவர் / உத்திரவாதமளித்தவர் கடனளிப்போர் நலனுக்காக பொது ஒதுக்கீடு, அல்லது கடன் பெறுபவர் / உத்திரவாதமளித்தவர் எந்த கடன் வழங்குபவருக்கும் பணம் செலுத்துவதை நிறுத்திவிட்டால் அல்லது அவ்வாறு செய்ய அச்சுறுத்தினால், அதன் சொத்துக்கள் இன்னும் குறிப்பாக ஒப்பந்தத்தின் கீழ் அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் மீதான உடைமை காப்பாளர் / பொறுப்பாளர் அல்லது அது போன்ற அதிகாரியை நியமித்தல், இந்த ஒப்பந்தத்தின் கீழ் அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களை கடன் பெறுபவர் / உத்திரவாதமளித்தவருக்கு எதிராக திவாலான நிலையின் மேல் ஏதேனும் மனு தாக்கல் செய்வது

அல்லது , கலைப்பதற்காக கடன் பெறுபவர் / உத்திரவாதமளித்தவர் மேல் ஏதேனும் மனு தாக்கல் செய்வது மேலும் மனு ஏற்கப்பட்ட 30 நாட்களுக்குள் திரும்பப் பெறப்படவில்லை எனில்; அல்லது

d) கடன் பெறுபவர்/ உத்திரவாதமளித்தவர் (நிறுவனமாக இருப்பின்) ஒன்று சேர்க்க அல்லது மறுசீரமைக்கும் நோக்கத்திற்காக நிறுவனத்தால் முன் எழுத்துப் பூர்வ ஒப்புதல் இன்றி மேற்கொள்வது; அல்லது

e) கடன் பெறுபவர்/ உத்திரவாதமளித்தவர் தனது வணிகத்தை நிறுத்துவதோ அல்லது நிறுத்த அச்சுறுத்தினாலோ; அல்லது

f) ஒரு கணக்காளர் அல்லது நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட கணக்காளர்கள் நிறுவனத்தின் மூலம் சான்றிதழ் அளிக்கப்படுவதாவது(எந்தவொரு நேரத்திலும் அவ்வாறு செய்ய நிறுவனத்திற்கு உரிமை உண்டு) கடன் பெறுபவரின் சொத்துக்களை விட கடன் பெறுபவரின் கடன்கள் அதிகரித்தல் அல்லது கடன் பெறுபவர் வியாபாரத்தில் நஷ்டத்தைச் சுமந்தாலோ; அல்லது

g) நிறுவனத்தின் எழுத்துப்பூர்வமான வெளிப்படையான அனுமதியின்றி எந்தவொரு விதத்திலும் அடமானம் வைத்த சொத்துக்களை விற்க, மறைக்க அல்லது இடமாற்ற அல்லது விற்க முற்படுவது, பரிமாற்ற, வில்லங்கம் உருவாக்க கடன் பெறுபவர் முயற்சித்தால்; அல்லது

h) அசல் சொத்துக்கான காப்பீட்டு பிரீமியத்தை கடன் பெறுபவர் செலுத்தத் தவறினால்; அல்லது

i) அடமானம் வைக்கப்பட்ட சொத்து பறிமுதல் செய்யப்பட்டு அல்லது இணைக்கப்பட்டு, எந்தவொரு அதிகாரியால் கையகப்படுத்துவது அல்லது உடைமை கைபற்றுதல்; அல்லது

j) கடன் பெறுபவர் எந்தவொரு வரி, தீர்வை, அல்லது வேறு சுமத்துதல் அல்லது கட்டணங்கள் / வேறு செலவினங்கள் அல்லது, அவ்வப்போது சட்டப்படி கீழ்க்காணும் சட்டபூர்வமான சொத்துக்களைப் பொறுத்தவரையில் நிறைவு செய்யப்பட வேண்டிய முறைமைகள்; விதிமுறைகள் மற்றும் வேறு எந்த சட்டத்திற்கும் இணங்க, தவறிவிட்டால்; அல்லது

k) அடமானம் வைக்கப்பட்ட சொத்தானது எந்தவொரு காரணத்திற்காகவும் திருடப்பட்டு அல்லது கண்டுபிடிக்க முடியவில்லை என்றால்; அல்லது

l) இந்த அடமானம் வைக்கப்பட்ட சொத்தானது கைப்பற்றப்பட்டாலோ அல்லது அச்சுறுத்தும் நிலையில் இருந்தாலோ அல்லது எந்த விதத்திலும் சேதமடைந்த அல்லது பயன்பாட்டிற்காக தகுதியற்றதாக ஆனாலோ அல்லது விபத்து மூலமாக சொத்துடன் சேர்த்து மூன்றாம் நபருக்கு உடற்காயம் ஏற்பட்டால்; அல்லது

m) நிறுவனத்திற்க்கு கடன் பெறுபவர் வழங்கவேண்டிய அல்லது வழங்கப்படும் எந்த பிடிசிக்களும் / ஈசிஎஸ் அல்லது ஏசிஹெச் கட்டளைகளும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி இதன் கீழ் சமர்பிக்கப்பட்டபோது எப்படியிருந்தாலும் எந்தக் காரணத்திற்காகவும் பணமாக்கப்படவில்லை அல்லது அதை மதிப்பிக்கப்படவில்லை; அல்லது

n) எந்த காரணம் ஏதாகிலும் கடன் பெறுபவரால் எந்த பிடிசி அல்லது ஈசிஎஸ் மாண்டேட்களுக்கும் பணம் செலுத்துவதை நிறுத்துவதற்கு ஏதேனும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தால்; நிறுவனத்திற்கு கடன் பெறுபவரால் அளிக்கப்பட்ட பின் தேதியிட்ட காசோலைகள்/ ஈசிஎஸ் மாண்டேட்கள் மதிப்பிக்கப்படவில்லை; அல்லது

o) கடன் வாங்கியவர் நிறுவனத்திற்கு ஆதரவாக செய்யப்பட்ட அனுமான ஒப்புதலுடன் அனுமானப்படுத்தப்பட்ட சொத்தின் பதிவுச் சான்றிதழின் நகலை வழங்க கடன் பெறுபவர் தவறினால்; அல்லது

p) இந்த உடன்படிக்கையில் வழங்கப்பட்டுள்ளபடி, சொத்தின் (பழைய மற்றும் புதிய வாகனம்/உபகரணம்) விவரங்களைத் தாக்கல் செய்ய கடன் பெறுபவர் தவறினால்; அல்லது

q) எந்தவொரு சூழ்நிலை அல்லது நிகழ்வு ஏற்படும் பொருட்டு, அது தீங்கு விளைவிக்கும் அல்லது பாதிப்புக்குள்ளாகும் அல்லது அழிந்துவிடும் அல்லது பாதிக்கப்படக்கூடும் அல்லது நிறுவனம் அல்லது கடன்பெறுபவர் / உத்திரவாதமளிப்பவரால் வழங்கப்படும் எந்தவொரு பிணையம் அல்லது அதன் பகுதிக்குபங்கம், பாதிப்பு, அபாயம், குறைபாடு அல்லது பாதிப்பு; அல்லது

r) கடன் பெறுபவர் / உத்திரவாதமளித்தவர் எந்த விதிமுறைகளையும், உடன்படிக்கைகளையும் நிபந்தனைகளையும் மீறினால் அல்லது அதில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பிரதிநிதித்துவங்கள் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட வேறு எந்த ஆவணங்களும் பொய்யானவை, தவறான அல்லது தவறாக வழி நடத்திச் செல்லும் எனக் கண்டறியப்பட்டால்; அல்லது

s) கடனை வழங்கியதற்குப் பிறகு, கடன் பெறுபவரின்/ உத்திரவாதம் அளித்தவரின் (துணை) விவாகரத்து செய்யப்பட்டால் அல்லது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருந்தால் அல்லது தொடங்கியிருந்தால் அல்லது அதற்காக எந்தவொரு குடும்ப நீதிமன்றத்திலும் வழக்குத் தாக்கல் செய்தால் அல்லது வேறெதற்காவது; அல்லது

t) மரணம்/பைத்தியம் அல்லது மற்ற ஏதேனும் கடன் வாங்குபவரின் சட்ட திறனின்மை மீது

u) கடன் பெறுபவரின் அமைப்பிலோ அல்லது நிர்வாகத்திலோ முக்கியமான மாற்றமோ அல்லது கடன் பெறுபவரின் மறுசீரமைப்பு செய்வது நிறுவனத்தின் முந்தைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி அல்லது கடன் பெறுபவர் நிர்வாகத்தின் நம்பகத்தன்மையை அனுபவிக்காமல் இழந்துவிடுவது; அல்லது

v) கடன் பெறுபவர் / உத்திரவாதமளித்தவர் வேறு எந்தவொரு நபருடனும் எந்த கடன் / வசதி / ஒப்பந்தத்தை மீறுவது; அல்லது

w) கடன் பெறுபவர் / உத்தரவாதமளிப்பவர் வேறு ஒரு ஒப்பந்தத்தில் கடன் பெறுபவர் / உத்தரவாதமளிப்பவராக இருந்து கொண்டு நிறுவனத்திற்கு எதிராக தவறிழைக்கும் தருணத்தில் ஈடுபடுதல்; அல்லது

x) உத்தரவாதமளிப்போரால் வழங்கப்பட்ட ஏதாவது குறைபாடு / பலவீனமான உத்தரவாதத்தினால் அத்தகைய உத்திரவாதம் பயனற்ற / செயலற்ற தன்மையை அடைதல்; அல்லது

y) இந்த ஒப்பந்தம் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய ஆவணத்தின் கீழ் கடன் பெறுபவரின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சட்டவிரோதமாக அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் அதன் எந்தவொரு கடமைகளையும் செய்ய எந்தவொரு நபருக்கும்/ உத்தரவாதமளித்தவருக்கும் (கடனாளியை உள்ளடக்கியது) சட்டவிரோதமாக மாறும் நிலை ஏற்படுதல்; அல்லது

z) இந்த ஒப்பந்தம் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய ஆவணத்தை உத்தரவாதமளித்தவர் அல்லது வேறு எந்தவொரு நபரும் (கடனாளியை உள்ளடக்கியது) செயல்பட இயலாது அல்லது சட்டவிரோதமாக மாறும் அல்லது செல்லுபடியாகாது என அறிவிக்கப்பட்டு அல்லது கடன் பெறுபவர் அல்லது உத்தரவாதமளித்தவர் அல்லது வேறு எந்த நபரும் எந்த காரணத்திற்காகவும் அத்தகைய ஒப்பந்தம் அல்லது ஆவணம் பயனற்றதாக, சட்டவிரோதமாக அல்லது செல்லுபடியாகாமல் போனது என்ற ஏதேனும் காரணத்திற்காக கூறப்பட்டால்; அல்லது

aa) கடன் பெறுபவர் / உத்தரவாதமளித்தவர் இந்த ஒப்பந்தத்தை அல்லது தொடர்புடைய வேறு எந்த ஆவணத்தையும் ஏற்க மறுக்கிறார் அல்லது இந்த ஒப்பந்தத்தை அல்லது வேறு எந்த ஆவணங்களையும் நிராகரிக்க விரும்பும் நோக்கத்தை நிரூபிக்கிறார்; அல்லது

